JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-  - Pw-3 Witness
for Prosecution

| CC.No. | 441/2025 | Crime No. | 262/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| Name | **Pw-3- ஜெயராமன்** | Village | |
|---|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது அம்மாபேட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2025 தேதியன்று நிலையை காவலர்கள் ரகு மற்றும் கார்த்திக் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் அனுமதி இன்றி மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு அலுவல் பணியில் ஈடுபட்டிருந்தபோது எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் முளியனூர் மதுபான கடை அருகில் உள்ள முட்புதரில் உள்ள மறைவில் மாலை 18.45 மணிக்கு கண்காணித்தபோது அங்கு சந்தேகப்படும்படி தனது கையில் இரண்டு பிளாஸ்டிக் பையில் ஏதோ வைத்துக் கொண்டு நின்றிருந்த ஒரு நபர் போலீசாரை கண்டதும் அங்கிருந்து ஓட முயன்றவரை சுற்றி பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் அளித்தவர் பின்னர் தனது பெயர் முருகேசன் என்றும் தனது முகவரியையும் கூறினார். பின்னர் அவர் தான் தமிழக அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வாங்கி வைத்துள்ளதாகவும், அதனால் போலீசார் ஆகிய எங்களை கண்டதும் அங்கிருந்து ஓட முயன்றதாகவும் தெரிவித்து தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் இரவு 19.00 மணிக்கு முறைப்படி கைது செய்தும், அவர் எடுத்து ஆஜர் செய்த 180 எம்எல் அளவுள்ள பிராந்தியுடன் இருந்த Veeran Brandy bottles – 10 பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் என்னுடன் வந்த காவலர்கள் இருவரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தனர். நீதிமன்றத்தில் உள்ள 10 பிராந்தி பாட்டில்களை தான் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் 10 கைப்பற்றினார்.

RAJKUMAR J   Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:02:37 +0530

பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 262/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP Act கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையின் அசலையும் கைப்பற்றிய வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைது செய்த எதிரிக்கு திரேக பரிசோதனை செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் என்னுடன் வந்த காவலர்கள் கார்த்தி மற்றும் ரகு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து அன்றைய தினமே எதிரி மீது சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP Act கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி மற்றும் புகார்தாரர் நான் தான் என்றால், சரிதான். சம்பவயிடத்திற்கு அருகில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால், சரிதான். நாங்கள் சென்று கண்காணித்தபோது எதிரி இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்கள் மட்டும்தான் கையில் வைத்திருந்தார் என்றால், சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் எதிரி இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்கள் கையில் வைத்திருந்ததாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் கண்காணித்தபோது எதிரி யாருக்கும் மதுபாட்டில் விற்கவில்லை என்றால், சரிதான். எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான்.

வழக்கு சொத்தை பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்தை ஒரு மாதம் காலதாமதமாகத்தான் இந்த நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது என்றால், சரிதான். முதல் தகவல் அறிக்கை இரண்டு நாள் காலதாமதமாகத்தான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால், சரிதான். பொது ஜன சாட்சிகள் யாரையும் நான் விசாரிக்கவில்லை என்றால், அங்கு பொதுஜன சாட்சிகள் யாரும் இல்லை. கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தபோது வீடியோ பதிவுகள் எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்றால், சரியல்ல. நான் வழக்கை முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by

him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:02:49 +0530

Sd/- (J.RAJKUMAR)

Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-2 Witness
for Prosecution

| CC.No. | 441/2025 | Crime No. | 262/2025 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-2- கார்த்திக்** | Village | |
| Father’s Name/Husband’s Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் என்னையும், நிலைய காவலர் ரகு என்பவரையும் அழைத்துக் கொண்டு நிலைய சரகத்தில் அனுமதியின்றி மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு அலுவலக அலுவலக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது ரகசியத் தகவலாளி கொடுத்த தகவலின் படி முளியனூர் அரசு மதுபான கடை அருகில் உள்ள முட்புதரில் இரவு 18.45 மணிக்கு கண்காணித்தபோது அங்கு சந்தேகப்படும்படி தனது கையில் இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் ஏதோ வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரி எங்களை கண்டவுடன் ஓட முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் தனது பெயர் முருகேசன் என்றும் தனது முகவரியையும் கூறினார். தான் தமிழக அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வாங்கி வைத்துள்ளதாகவும், எனவே போலீசார் ஆகிய எங்களை கண்டவுடன் அங்கிருந்து ஓட முயன்றதாகவும் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் இரவு 19.00 மணிக்கு முறைப்படி கைது செய்தும், பின்னர் எதிரி எடுத்து ஆஜர் செய்த 180 எம்எல் அளவுள்ள பிராந்தியுடன் இருந்த Veeran Brandy bottles – 10 பாட்டில்களை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் நானும், என்னுடன் வந்த காவலர் கார்த்தி என்பவரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். நீதிமன்றத்தில் உள்ள 10 பிராந்தி பாட்டில்களை

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.07 19:02:57 +0530

தான் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் 10 கைப்பற்றினார். பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 262/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP Act கீழ் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினம் நானும், எனது உயர் அதிகாரியும் ரோந்து பணிக்காக எங்கு எங்கு சென்றோம் என்றால், அம்மாபேட்டை, பூதப்பாடி, குறிச்சி, குறிச்சி பிரிவு ஆகிய இடங்களுக்கு சென்றோம். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்க்கும்போது எதிரி எதனை வைத்துக்கொண்டு நின்றிருந்தார் என்றால், மது பாட்டில்களை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். அவர் கீழே வைத்திருந்தார். நான் பார்க்கும்போது மது பாட்டில்கள் எதுவும் அவரது கையில் இல்லை என்றால், சரிதான். அவருக்கு அருகில் வைத்திருந்தார். நாங்கள் கண்காணிக்கும்போது மது பாட்டில்கள் எதுவும் எதிரி விற்கவில்லை என்றால், சரியல்ல. அங்கு பொதுமக்கள் நிறைய நபர்கள் இருந்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி அங்கு யாருக்கும் மதுபாட்டில் விற்கவில்லை என்றால், பொதுமக்கள் இல்லை என்றால், சரியல்ல. எங்களை பார்த்ததும் அனைவரும் ஓடி விட்டனர். கைப்பற்றுதல் மகஜரில் வரிசை எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. மது பாட்டில்களின் மதிப்பும் கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல.

வழக்கு சொத்தை கைப்பற்றும்போது உயர் அதிகாரி என்னென்ன நடைமுறைகளை பின்பற்றினார் என்றால், முதலில் கைப்பற்றினார், இரண்டாவது அதில் கையொப்பம் செய்தார். கைப்பற்றும்போது அரக்கு சீல் எதுவும் வைக்கவில்லை என்றால், சரிதான். கைப்பற்றும்போது வீடியோ பதிவு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். சம்பவயிடத்தில் பொது மக்கள் சாட்சிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை நாங்கள் விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியும் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பிளாஸ்டிக் பையை கைப்பற்றவில்லை என்றால், சரிதான்.

எதிரி வேறு எந்த பாட்டில்களையும் கையில் வைக்கவில்லை என்றால், சரியல்ல. மது பாட்டில் வைத்திருந்தார். மேற்படி மதுபாட்டில்கள் அவர் கையில் வைக்கவில்லை என்றால், சரிதான். அருகில் தான் வைத்திருந்தார். சம்பவயிடத்தில் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். மேற்படி கைப்பற்றுதல் மகசர் தட்டச்சு செய்யப்பட்டது என்றால், சரிதான். நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண் உள்ளது என்றால், சரிதான்.

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:03:04 +0530

மறு விசாரணை இல்லை

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:03:14 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani

JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| | | | | | |
|---|---|---|---|---|---|
| CC.No. | 441/2025 | Crime No. | 262/2025 | Station | Ammapet |

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw-1- ரகு** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 07.03.2026 | | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2025 தேதியன்று நிலையை சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயராமன் என்பவர் என்னையும், நிலைய காவலர் கார்த்தி என்பவரையும் அழைத்துக் கொண்டு நிலைய சரகத்தில் அனுமதியின்றி மது விற்பனை மற்றும் சூதாட்ட தடுப்பு அலுவலக அலுவலக ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது ரகசியத் தகவலாளி கொடுத்த தகவலின் படி முளியனூர் அரசு மதுபான கடை அருகில் உள்ள முட்புதரில் இரவு 18.45 மணிக்கு கண்காணித்தபோது அங்கு சந்தேகப்படும்படி தனது கையில் இரண்டு பிளாஸ்டிக் பாட்டில்களில் ஏதோ வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரி எங்களை கண்டவுடன் ஓட முயன்றவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரித்தபோது முன்னுக்கு பின் முரணாக கூறியவர் பின்னர் தனது பெயர் முருகேசன் என்றும் தனது முகவரியையும் கூறினார். தான் தமிழக அரசு மதுபானங்களை அதிக விலைக்கு விற்பனை செய்ய வாங்கி வைத்துள்ளதாகவும், எனவே போலீசார் ஆகிய எங்களை கண்டவுடன் அங்கிருந்து ஓட முயன்றதாகவும் கூறி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி அன்றைய தினம் இரவு 19.00 மணிக்கு முறைப்படி கைது செய்தும், பின்னர் எதிரி எடுத்து ஆஜர் செய்த 180 எம்எல் அளவுள்ள பிராந்தியுடன் இருந்த Veeran Brandy bottles – 10 பாட்டில்களை உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார். அங்கு பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன் வராததால் நானும், என்னுடன் வந்த காவலர் கார்த்தி என்பவரும் கைப்பற்றுதல் மகசரில் சாட்சி கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.03.07 19:03:26 +0530

கையொப்பம் என்னுடையதுதான். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்றத்தில் உள்ள 10 பிராந்தி பாட்டில்களை தான் அன்றைய தினம் உதவி ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் 10 கைப்பற்றினார். **அந்த பிராந்தி பாட்டில்கள் 10 ம் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் கைது செய்த எதிரி மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 262/2025, சட்டப்பிரிவுகள் 4(1)(C) of TNP Act கீழ் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். வழக்கு தொடர்பாக புலன் விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றைய தினம் நானும், எனது உயர் அதிகாரியும் ரோந்து பணிக்காக எங்கு எங்கு சென்றோம் என்றால், அம்மாபேட்டை, பூதப்பாடி, குறிச்சி, குறிச்சி பிரிவு ஆகிய இடங்களுக்கு சென்றோம். நான் சம்பவயிடத்திற்கு சென்று பார்க்கும்போது எதிரி எதனை வைத்துக்கொண்டு நின்றிருந்தார் என்றால், மது பாட்டில்களை வைத்துக் கொண்டு நின்று கொண்டிருந்தார். அவர் கீழே வைத்திருந்தார். நான் பார்க்கும்போது மது பாட்டில்கள் எதுவும் அவரது கையில் இல்லை என்றால், சரிதான். அவருக்கு அருகில் வைத்திருந்தார்.

நாங்கள் கண்காணிக்கும்போது மது பாட்டில்கள் எதுவும் எதிரி விற்கவில்லை என்றால், சரியல்ல. அங்கு பொதுமக்கள் நிறைய நபர்கள் இருந்தார்கள். நான் சொல்வது தவறு என்றாலும், எதிரி அங்கு யாருக்கும் மதுபாட்டில் விற்கவில்லை என்றால், பொதுமக்கள் இல்லை என்றால், சரியல்ல. எங்களை பார்த்ததும் அனைவரும் ஓடி விட்டனர். கைப்பற்றுதல் மகஜரில் வரிசை எண் எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. மது பாட்டில்களின் மதிப்பும் கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. வழக்கு சொத்தை கைப்பற்றும்போது உயர் அதிகாரி என்னென்ன நடைமுறைகளை பின்பற்றினார் என்றால், முதலில் கைப்பற்றினார், இரண்டாவது அதில் கையொப்பம் செய்தார். கைப்பற்றும்போது அரக்கு சீல் எதுவும் வைக்கவில்லை என்றால், சரிதான்.

கைப்பற்றும்போது வீடியோ பதிவு எதுவும் செய்யவில்லை என்றால், சரிதான். சம்பவயிடத்தில் பொது மக்கள் சாட்சிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரை நாங்கள் விசாரிக்கவில்லை என்றால், சரிதான். நான் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும், புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு நான் பொய் சாட்சியும் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பிளாஸ்டிக் பையை கைப்பற்றவில்லை என்றால், சரிதான்.

எதிரி வேறு எந்த பாட்டில்களையும் கையில் வைக்கவில்லை என்றால், சரியல்ல. மது பாட்டில் வைத்திருந்தார். மேற்படி மதுபாட்டில்கள் அவர் கையில் வைக்கவில்லை

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:03:33 +0530

என்றால், சரிதான். அருகில் தான் வைத்திருந்தார். சம்பவயிடத்தில் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் தான் கையொப்பம் செய்தேன் என்றால், சரிதான். மேற்படி கைப்பற்றுதல் மகசர் தட்டச்சு செய்யப்பட்டது என்றால், சரிதான். நான் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் முதல் தகவல் அறிக்கையின் குற்ற எண் உள்ளது என்றால், சரிதான்.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.07 19:03:40 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani